[8th September 1970

Girls' High Schools at Mannargudi

*75. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) the number of teachers of Secondary Grade in Girls' High Schools at Mannargudi, Thanjavur District, in whose case weightage for service in elementary schools has not been given since 1963 ;

(*b*) the number of appeals received by the Inspectress of Girls Schools, Thanjavur Circle, from such teachers ; and

(*c*) the reasons for the delay in the disposal of such appeals ?

மன்னார்குடியில் உள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடியில் உள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் இடைநிலைத் தரத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் எத்தனை பேருக்கு அவர்கள் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றிய கால அளவு 1963 முதல் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை ?

(இ) அத்தகைய ஆசிரியர்களிடமிருந்து தஞ்சாவூர் வட்டத்தின் பெண்கள் பள்ளிகளின் இன்ஸ்பெக்டரஸ்ஸுக்கு எத்தனை மனுக்கள் வந்தன ?

(உ) அந்த மனுக்கள் மீது முடிவெடுப்பதில் உள்ள காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஒன்றுமில்லை.

(இ)யும் (உ)வும் : இக்கேள்விகளுக்கு இடமில்லை.

DEPUTY CHAIRMAN : Now we pass on to question 87.

Ticketless travel in Buses

*87. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) the penalty imposed on passengers for ticketless travel in State Transport buses ; and

(*b*) whether it is found sufficient to prevent ticketless travel ?

பேருந்துகளில் பயணச் சீட்டின்றிப் பயணம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

8th September 1970]

(அ) அரசு போக்குவரத்து பேருந்துகளில் பயணச் சீட்டின்றிப் பயணம் செய்வோருக்கு விதிக்கப்படும் அபராதம் எவ்வளவு ?

(இ) இந்த அபராதம் பயணச் சீட்டின்றிப் பயணம் செய்வதைத் தடுப்பதற்கு போதுமானதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) தற்போது அபராதம் எதுவும் விதிக்கப்படுவதில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ராகவானந்தம் : பஸ்ஸில் உள்ள இட நெருக்கடி காரணமாக, பல பிரயாணிகள் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்ய நேரிடுகிறது. சமீபத்தில் இந்திரா நகரில் ஒருவர் ஏறி திருவான்மியூரில் இறங்கினார். அதற்குப் பத்து காசு டிக்கெட்டு. அவர் டிக்கெட் வாங்காமல் இறங்கிச் சென்றுவிட்டார். அவர் டிக்கெட் வாங்கவில்லை என்பதற்காக அதில் உள்ள கண்டக்டருக்கு ஆறு மாதம் இன்கிரிமெண்ட் ''கட்'' செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்பவர்களுக்குக் குறைந்தபட்ச தண்டனையாக ஒரு ரூபாய் விதிக்க வேண்டும். பத்து காசு, இருபது காசு என்றால், சுலபமாகக் கட்டி விட்டுச் சென்றுவிடுவார்கள். அதை அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : ஏற்கெனவே இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற சட்டத்தில் உள்ள சில விதிமுறைகளைத் திருத்துவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. அதன்படி . . .

"If at any time a passenger or person travelling in stage carriage of the Tamil Nadu State Transport Department is unable or fails to produce his valid journey ticket on demand by any checking official of the Tamil Nadu Transport Department he shall be liable to pay the legal fare from the place the stage carriage originally started or such portion thereof as may be required by that checking official and in addition he shall be liable to pay a penalty of one exra fare."

திரு. ஜி. சுவாமிநாதன் : பேருந்துகளைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு ''பர்மிட்'' கொடுக்கிறபோது இவ்வளவு பேர்கள்தான் நின்றுகொண்டு பிரயாணம் செய்யலாம் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். சென்னையில் ஓடுகிற பேருந்துகளில் அந்த வரம்பு மீறப்பட்டு எவ்வளவு பேர் வேண்டுமானாலும் பிரயாணம் செய்யலாம் என்றிருக்கிறதாகத் தெரிகிறது. அப்படி அதிகமானவர்களை ஏற்றிக்கொள்ள முடியாது என்று கண்டக்டர்கள் சொல்லி ஏற்றிக்கொள்ள மறுப்பதாகவும் தெரிகிறது. அந்த நிலைமை எப்படி வந்தது? பர்மிட்டில் இவ்வளவு பேர்தான் ஏற்றிக்கொள்ளலாம் என்று விதி இருக்கும்போது, அதற்கு மேல் அதிகமானவர்களை ஏற்றிக்கொள்வதற்கு அரசாங்கம் எப்படி அனுமதிக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மூலக் கேள்வி டிக்கெட்டில்லாமல் போகிறவர்களைப் பற்றியிருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கேள்விக்குப் பதில் அளிக்க முடியவில்லை. தனியாகக் கேள்வி கேட்டால், பதில் சொல்லலாம்.

திரு. எஸ். ராகவானந்தம் : குறைந்த பட்ச தண்டனை இவ்வளவு என்று விதிக்கப்பட்டாலும், சென்னையைப் பொறுத்த வரையில், பத்து, இருபது காசு என்று விதித்தால், அதைச் சுலபமாகக் கொடுத்துவிட்டு இறங்கிவிடுவார்கள். ஆகையால் அதை அதிகமாக்க அரசு மீண்டும் பரிசீலிக்குமா ? டிக்கெட் வாங்காமல் போகிற பாசஞ்சர்களினால் கண்டக்டருக்கு ஆறு மாதம் இன்கிரிமெண்டை ''கட்'' செய்கிறார்கள். அவர்கள் ஏழைத் தொழிலாளிகள். ஆகையால் அப்படிப்பட்ட தண்டனையை ரத்து செய்ய அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : பஸ்ஸில் டிக்கெட்டில்லாமல் பல காரணங்களினால் பிரயாணம் செய்ய நேரிடுகிறது. கண்டக்டர் சரியாக டிக்கெட் கொடுப்பதில்லை. வேண்டுமென்றே டிக்கெட்டில்லாமல் சிலர் பிரயாணம் செய்கிறார்கள். சிலர் தவறுதலினால் வாங்குவதில்லை. ஆகையால் டிக்கெட்டில்லாமல் போவதைத் தடுப்பதற்கான விதிமுறைகளை மாற்றியமைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கண்டக்டர்களிடம் எல்லோரும் சரியாக டிக்கெட் வாங்கும்படி செய்யச் சொல்வது நல்லது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : வெளி மாவட்டங்களுக்குப் போகிற நீண்ட தூர ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களில் இம்மாதிரி ''டிக்கெட்லெஸ் டிராவல்'' செய்வது கண்டிக்கத்தக்கது. அதைச் சுலபமாகக் கண்டுபிடித்துவிடலாம். எனக்கு இந்த நகர பஸ் சர்வீஸில் சென்றபோது சில அனுபவம் ஏற்பட்டது. ஒரு முறை ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஏறி மவுண்ட் ரோடில் ''காஸ்மாபாலிடன் கிளப்'' அருகில் இறங்கினேன். ஒரு ரூபாய் கொடுத்தேன். எனக்கு டிக்கெட்டும் கொடுக்கப்படவில்லை, சில்லறையும் கொடுக்கப்படவில்லை. மற்றொரு முறை உம்முடி கன்னையா செட்டி கடை அருகில் இறங்கினேன். நான் இரண்டு முறைதான் அந்த பஸ்ஸில் போனேன். இரண்டு முறையிலும் அப்படி நடந்தது. சில ஸ்டாப்பில் அதிகமான பேர்கள் ஏறுகிறார்கள். எல்லோரையும் ஏற்றிக்கொள்ளுகிறார்கள். அதில் சிலர் பக்கத்திலேயே டிக்கட் வாங்காமல் இறங்கிச் சென்றுவிடுவதைப் பார்த்தேன். கூட்டம் அதிகமாக இருப்பதால், சரியாகக் கொடுக்கவில்லை என்று கண்டக்டரையோ, வாங்கவில்லை என்று பாசஞ்சரையோ சொல்வதில் பயனில்லை. இதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : காஸ்மாபாலிடன் கிளப்பில் இறங்கியதாக உறுப்பினர் கூறினார். அதனால் அவர் ஒரு ரூபாய்க்கு பாக்கிச் சில்லறை வாங்காமல் இருந்திருக்கலாம். பணத்தைப்பற்றி அவருக்கு அக்கறை இல்லாமல் இருந்திருக்கலாம். பஸ்ஸில் ஐம்பது, அறுபது பேர்கள் என்று நெருக்கடியாக இருந்ததால், டிக்கெட் இல்லாமல் அல்லது கேட்காமல் பிரயாணம் செய்து இறங்கியிருக்கலாம். வேறு ஒன்றும் அதில் தவறிருக்காது.

திரு. கே. ராஜாராம் : இந்தமாதிரி விஷயத்தில் யார் குற்றவாளி என்பது முக்கியமல்ல. பத்து பைசா டிக்கெட் வாங்காமல் போவதால், எந்தப் பிரயாணியும் அதை லாபமாகக் கருதப்போவதில்லை. பத்து பைசா டிக்கெட் கொடுக்காததால், அந்தத் தொழிலாளிக்கு லாபம்

8th September 1970]

என்பதும் இல்லை. நான் பார்த்த வரையில் சொல்ல வேண்டுமென்றால் காலை, மாலை வேளைகளில் 'பீக்-அவர்'களில் டிக்கெட் கொடுக்கவே முடிவதில்லை. பிரயாணிகள் கஷ்டப்படுகிறார்கள். கண்டக்டர்களும் பிரயாணிகளைக் கேட்டு, டிக்கெட் கொடுக்க முடியாமல் அவதிப்படுகிறார்கள். ஆகையால் இந்த 'பீக்-அவர்'களில் இரண்டு கண்டக்டர்களை ஒவ்வொரு பஸ்ஸிலும் போட்டு, அதிகப் பிரயாணிகள் உள்ள ரூட்டுகளில் ஏற்பாடு செய்தால், பிரயாணிகளுக்கும் கண்டக்டர்களுக்கும் தொந்தரவு இல்லாமல் இருக்கும். இதை அரசாங்கம் யோசித்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : ''பீக் அவர் பிராப்ளம்'' முக்கியமான பிரச்னைதான். அதைச் சமாளிப்பதற்காக சில பஸ்களில் இரண்டு கண்டக்டர்களை நியமித்திருக்கிறோம். ஸ்டாண்ட் கண்டக்டர்களை ஆங்காங்கு வைத்து டிக்கெட் கொடுக்கிற ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்தச் சங்கடங்களைத் தீர்ப்பதற்கு அதிகமான பஸ்களை விடுவதுதான் பரிகாரம் என்று அரசு கருதுகிறது.

திரு. எஸ். ராகவானந்தம் : திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் ஒரு ரூபாய் கொடுத்தபோது மீதிச் சில்லறை கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை மெயில் பத்திரிக்கையைப் பார்த்தால் தெரிகிறது: ''ஒருவர் பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்துவிட்டு சில்லறை வாங்காமல் மறந்து போய்விட்டார். அந்தக் கண்டக்டர் திரும்ப கொண்டுவந்து கொடுத்திருக்கிறார்''. அவருக்கு ஒரு ''ரெட் எண்ட்ரி'' கொடுக்க அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : நல்ல கண்டக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாராட்டு தெரிவித்திருக்கிறோம்.

திரு. வி. தங்கபாண்டியன் : இட நெருக்கடியை முன்னிட்டு இரண்டு கண்டக்டர்கள் சென்னை நகரத்தில் சில இடங்களில் மட்டும் போடுவதால், சில பகுதிகள்தான் பயன் பெறுகின்றன. ஆகையால் எல்லா பஸ்களிலும் காலை மாலை நெருக்கடி நேரங்களில் இரண்டு கண்டக்டர்களைப் போட வேண்டுமென்று தமிழ் நாடு போக்குவரத்து அட்வைசரி கமிட்டி அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறதா ? அதைப்பற்றி அரசாங்கம் செய்த முடிவென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : இது ஒரு நல்ல யோசனை. ஏற்கெனவே நாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை காரணமாக, 40 ஸ்டாண்ட் கண்டக்டர்களை அதிகமாக இந்த ''பீக் அவர் பிராப்ளம்'' இருக்கிற இடங்களில் நியமித்திருக்கிறோம். இதைப் பரிசீலித்த பிறகு, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : வெளி நாடுகளில் பஸ்களில் போவதற்கு ஒரே வழிதான் வைத்திருக்கிறார்கள். இரண்டு வழி அல்ல. உள்ளே போகிறபோது விக்கெட் கேட் வைத்திருக்கிறார்கள். பத்து, இருபது முப்பது பைசா என்பதற்குப் பதிலாக சராசரி கணக்கிட்டு பதினைந்து பைசா என்று வைத்து அதை ஒரு பெட்டிக்குள் போட்டதும் டிரைவர் ஒரு பட்டனை அழுத்துகிறார். கதவு தானாகத் திறந்துகொண்டதும்

[8th September 1970

உள்ளே போகிறார்கள். அந்த மாதிரி இங்கே கொண்டுவந்தால் கண்டக்டரே இல்லாமல் இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிடலாம். அதை அரசாங்கம் கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அயல் நாட்டிற்குச் சமீபத்தில் சென்றுவந்த உறுப்பினர் அவர்கள் தங்கள் அனுபவத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது நல்ல முறைதான். ஆனால் இங்கே அதற்கு ஆட்சேபணை இருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : பஸ்ஸில் இடம் இருந்தும் கூட, கூட்டமாக மக்கள் ஏறும்போது, அரை குறையாக ஏறிக்கொண்டிருக்கும்போதே கண்டக்டர்கள் விசில் ஊதிவிடுவதால் பஸ் உடனே கிளம்பி விடுகிறது. ஏறிக்கொண்டிருந்தவர்கள் கீழே விழக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. அப்படிப்பட்ட ''கம்ப்ளேண்ட்'' அரசாங்கத்திற்கு வந்து, அதன்பேரில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? இந்த நிலைமை இருப்பதை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : உறுப்பினர் சொல்லுகிற கருத்துக்களை மனதில் கொண்டு அரசு போக்குவரத்துத் தொழிலாளர்கள் பணியாற்றுவார்கள் என்று கருதுகிறேன். அரை குறையாக ஏறுகிற முறை இல்லை என்று நினைக்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Will the Hon. Minister, in view of the discussion which has taken place and the questions which have been put, consider the possibility, at least during peak hours, if not during normal hours, of having somebody to issue tickets at one end before the queue starts and having a queue in a long line—say, opposite the Kapaleeswarar Temple — so that the persons may get in at the other end going through the queue ? It will also facilitate the passengers getting into the line and the buses. I found that this was being done during the last occasion when there was a strike and only 25 passengers were allowed. This was being done with great effectiveness though the total number of passengers was far more than the buses could take in ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவதுபோல, இப்போது ''பீக் அவர் பிராப்ளம்'' இருக்கிற இடங்களில் கியூ ஃபார்ம் செய்து அங்கே டிக்கெட் கொடுக்க ஸ்டாண்ட் கண்டக்டர்களைப் போட்டிருக்கிறோம். உறுப்பினர் யோசனையை இனிமேல் பரிசீலிப்போம்.

திரு. சி. வி. ராஜகோபால் : பஸ்ஸில் செல்லும் பிரயாணிகள் கண்டக்டர்கள் செய்கையினால் மிகவும் வேதனைப்படுகிறார்கள். அதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் ஏதேனும் வழிவகை செய்யுமா ?

திரு. எம். எத்திராஜுலு : பஸ்ஸில் செல்லுகிறவர்கள் சிலர் வேண்டுமென்றே டிக்கெட் எடுக்காமல் செல்லுகிறார்கள். அவர்களைக் கண்டக்

8th September 1970]

டர் பிடித்து டிக்கெட் கேட்கிற நேரத்தில் அவர்கள் தாக்கக் கூடிய அளவில் சம்பவங்கள் நடக்கின்றன. அம்மாதிரிச் சம்பவங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு, கண்டக்டர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருப்பதால், இந்த மாதிரி பீக் அவரில் ஒவ்வொரு பஸ்ஸிலும் ஒரு போலீஸ்காரரை அனுப்புவதுபற்றி அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : பஸ்ஸில் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்கிற ஒருவர் அப்படித் தாக்குவார் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அப்படிச் சொல்லுவது மக்களைப்பற்றிக் குறை கூறுவதாகும். தவறிப்போய் டிக்கெட் வாங்காமல் இருக்கலாமே தவிர, வேண்டுமென்றே இருக்கமாட்டார்கள். அப்படி இருந்தாலும், கேட்கும்போது ஆட்சேபணை செய்யமாட்டார்கள். உடனே பணத்தைக் கொடுத்துவிடுவார்கள். ஏற்கனவே இருக்கிற நெருக்கடியோடு இன்னும் ஒரு போலீஸ்காரரையும் சேர்த்து அனுப்புவது சரியாகாது. நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும். மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் சுமுக உறவு நிலவும்படி செய்வார்கள் என்று கருதுகிறேன்.

Motor cars

*88. *Q.*—THIRU S. S. THENNARASU : Will the Hon. the Minister for Public Works be pleased to state the names of M.L.As. & M.L.Cs. to whom motor cars were allotted from the Tamil Nadu Government Quota during the financial years 1969-70 and 1970-71 (till date) ?

மோட்டார் கார்கள்

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

1969-1970, 1970-1971-ஆம் நிதி ஆண்டுகளில் (இன்று வரை) தமிழ்நாடு அரசு பங்கீட்டிலிருந்து எந்தெந்த சட்ட மன்ற, பேரவை உறுப்பினர்களுக்கு மோட்டார் கார்கள் (Motor Cars) ஒதுக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : பேரவை முன் விவர அறிக்கை (†) ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Surplus lands

*76. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state : 4-30 p.m.

(*a*) the number of acres of the surplus lands that have been so far taken over by the Government under the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 ; and

(*b*) the number of acres that have been so far handed over to the tenants by the Government ?

†Printed as Appendix II.